**தான்.** அந்த வகையில் கோவை தேர்தலைப் பொறுத்து பரிந்துரை செய்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் அதை முடிவு செய்ய வேண்டியது மத்திய அரசின் கையில்தான் இருக்கிறது.

இப்போது சொல்லப்பட்ட இந்தப் பிரச்சினைகளைப் பொறுத்த வரை தேர்தல் எல்லை வரையறை ஆணைக்குழு வருகின்றபோது என்ன பரிந்துரைகளைச் செய்யலாம் என்பதற்கு முன்னேற்பாடாகக் கருத்துக்களைத் திரட்டிவைத்துக் கொண்டு, மன்றத்தையோ, எதிர்க்கட்சித் தலைவர்களையோ கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கலாம் என்று இந்த வாய்ப்பில் தெரிவித்துக்கொண்டு இதனை நிறைவேற்றித் தரும்படி கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த விவகாரத்தில் கொஞ்சம் விரைவாக முடிவெடுப்பது நல்லது. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் ஓராண்டுக்கு முன்னாலேயே இங்கு சட்டசபைத் தேர்தல் வருகிற நிலைமை இருக்கிறது. இங்கே இருக்கும் எலக்ஷன் கமிஷன் அந்த வேலைகளில் ஈடுபடலாம். ஆனால், எமோ எப்படிப் பிரிக்க வேண்டுமென்றாலும் விரைவாகப் பிரிக்காத காரணத்தால் சிரமங்கள் வந்தன என்ற நிலைமை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இதைக் கூறுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** முன்பு என்ன முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன என்று பார்த்து நிலைமைகளைக் கண்டறிந்து விரைவில் இவற்றில் முடிவு எடுக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

## (2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (இ) மேலவை உறுப்பினர்களுக்குப் பேரவையில் தனி இடம் ஒதுக்குவது பற்றி

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினை மீது நிற்கிறேன். இந்தச் சபை நடக்கும்போது இதுவரை மேல்சபை உறுப்பினர்களின் வசதிக்காக பின்பகுதியில் இருப்பிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தக் கூட்டத்

1973 ஆகஸ்ட் 4] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

தொடரில் அந்த இருப்பிடங்கள் அகற்றப்பட்டுள்ளன. அவை தங்கள் உத்தரவின் பேரில் அகற்றப்பட்டனவா? இப்போது மேல்சபை உறுப்பினர்கள் மிகுந்த சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். மீண்டும் அவற்றைப் போட உத்தரவிடப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேலே அவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** அங்கு எம்.பி.க்கள் வந்து உட்கார்ந்து விடுகிறார்கள். மேலவை உறுப்பினர்களுக்கு இடம் கிடைப்பதில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும் மேலே இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கு கீழே போடப்பட்டிருந்த பெஞ்சுகளும், நாற்காலிகளும் சட்ட முறைப்படி போடப்பட்டவை அல்ல. உறுப்பினர்களின் வசதிக்காகப் போடப்பட்டவை. சட்ட முறைப்படி இல்லாததால் அந்த பெஞ்சுகளும், நாற்காலிகளும் எடுக்கப்பட்டு விட்டன. அவ்வளவுதான்.

## (7) அரசினர் தனித் தீர்மானம்—தொடர்ச்சி.

**பாராளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (31-வது திருத்த) சட்ட முன்வடிவினல் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்தல்—தொடர்ச்சி.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டீ-லிமிடேஷன் கமிட்டிக்கு பேரவையிலிருந்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்—

1. திரு. செ. கந்தப்பன்.
2. திரு. எல். கணேசன்.
3. திரு. ஜே. எஸ். இராசு.
4. திரு. என். டென்னிஸ்.
5. திரு. எம். ஏ. லத்தீப்.